வந்துள்ளது. அதே இடத்தில் நகராட்சிக் கட்டடம் கட்டப்படுமா? வேறு இடத்தில் கட்டப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சரிடத்தில் நேரில் சென்று கேட்டுக்கொள்ளுங்கள். திரு. சு. புகழேந்தி, உட்காருங்கள்.

வினா வரிசை எண் 214, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**214—**

**பலவகை தொழில்நுட்பக் கல்லூரி**

***5509—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆனைமலையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆனைமலையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

**திருமதி வி. கஸ்தூரி வாசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலனே பெரிதென எண்ணிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், அவர்கள் வழியில் ஆட்சி செய்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். வால்பாறை தொகுதி, கோட்டூரில்

ஒரு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், ஒரு பெண்கள் மேல்நிலைப் பள்ளியும், ஆனைமலையில் ஒரு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், ஒரு பெண்கள் மேல்நிலைப் பள்ளியும், வேட்டைக்காரன்புதூரில் ஒரு மேல்நிலைப் பள்ளியும், காளியாபுரத்தில் அரசு உதவிபெறும் ஒரு மேல்நிலைப் பள்ளியும், ரெட்டியாரூரில் ஓர் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளியும், திவான்சாபுதூரில் ஒரு மேல்நிலைப் பள்ளியும், தென்சித்தூரில் ஒரு மேல்நிலைப் பள்ளியும் என 9 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. ஆனால், இங்கு அரசு கலைக் கல்லூரியோ, தொழில்நுட்பக் கல்லூரியோ கிடையாது. அவர்கள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், 150 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கோயம்புத்தூருக்குத்தான் செல்ல வேண்டும். ஆகவே, ஏழையெளிய, விவசாய மக்களின் நலன் கருதி, அவர்களுடைய குழந்தைகள் படிப்பதற்காக, கண்டிப்பாக ஆனைமலையில் ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தரவேண்டுமென்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதி அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்திலே, இரண்டு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 6 அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 20 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் ஆக மொத்தம் 28 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. கோயம்புத்தூர், சித்தாபுதூரிலே அரசு மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதேவேளையில் கடந்த 2016–2017 ஆம் கல்வியாண்டில் பார்க்கின்றபொழுது, ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் மாணவர்களின் சேர்க்கை சதவிகிதம் இந்தப் பகுதியில் மிகவும் குறைவாக இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதியில், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை கூடுதலாக அமைக்கும் அளவில் மாணவர்களின் சேர்க்கை சதவிகிதம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.*

*2017 ஜூலை 18]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

**திருமதி வி. கஸ்தூரி வாசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மேல் பகுதியில் ஒரு கல்லூரி உள்ளது. அங்கு, எஸ்டேட் பகுதியைச் சேர்ந்த குழந்தைகள்தான் படிக்க முடியும். கீழ்பகுதியிலிருந்து அங்கு செல்வது சிரமம். கீழே உள்ள குழந்தைகள் படிக்கச் செல்வதானால், கோயம்புத்தூர்தான் செல்ல வேண்டும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்தாலோசித்து, அங்கு ஒரு கலைக் கல்லூரியையோ, பலவகை தொழில்நுட்பக் கல்லூரியையோ கண்டிப்பாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் சார்ந்திருக்கின்ற அந்தப் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இதில் ஏதேனும் ஒன்றை நிறுவ வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் ஆலோசனை செய்து, எதிர்காலங்களில் அந்தப் பகுதியில் மேலும் ஏதேனும் கல்லூரிகள் தேவைப்பட்டால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவள்ளூர் தொகுதியிலே, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அதிலும் குறிப்பாக பெண்களுக்கான கல்லூரியை இந்த அரசு ஆரம்பிக்க முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசானது, அனைவருக்கும் உயர் கல்வி தர வேண்டுமென்ற நோக்கத்தோடு, கடந்த 6 ஆண்டு காலத்தில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 21, பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகள் 24, பொறியியல் கல்லூரிகள் 4, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் 16 என்று 65 கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறது. மேலும், மாணவர்களின் சேர்க்கை சதவிகிதம் மற்றும் கூடுதலாக அரசு கலைக் கல்லூரிகளில் மாணவர்கள் சேருகின்ற நிலையை அறிந்து, இந்த ஆண்டும் அரசுக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளிலும், 20 சதவிகித மாணவர்கள் சேர்க்கைக்கான உத்தரவையும், மாண்புமிகு அம்மாவினுடைய வழி நடக்கின்ற அரசு, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியாருடைய உத்தரவின் பேரிலே அனுமதி தந்திருக்கிறது. அதற்கும் மேலாக, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்களுடைய சேர்க்கைக்கு ஏற்றாற்போல், வரக்கூடிய காலகட்டங்களிலே ஆய்வு செய்து, அந்தப் பகுதியில் கல்லூரிகள் அவசியம் தேவை என்றால், அதையும் நிறைவேற்றுகின்ற வகையில், மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**215—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***9974—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—